[7th September 1960

SRI A. VEDARATHNAM : பே கமிஷன் ரிப்போர்ட்டில் கண்டபடி இப்போது ஏற்பட்டுள்ள வித்தியாசத்தைச் சரிகட்டுவது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், இதற்கு முந்திய வித்தியாசங்களை ஒழிக்க ஏதேனும் பரிகாரம் தேடப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முந்தைய வித்தியாசத்தைத்தான் புதிய உத்தரவின் மூலம் ஒழிக்கப் போகிறோம்.

Seminars

* 525 Q.—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether Seminars in Block Development Department to exchange ideas are being held in the State;

(*b*) if so, the various kinds of Seminars and the period and the area within which they are being held;

(*c*) the objects of these respective Seminars in detail; and

(*d*) when the next Seminars in Salem district are to be held?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) The various kinds of Seminars held are—

(i) Regional Seminars of Officials and non-officials;

(ii) Seminars on 'Social Education';

(iii) Panchayat Development Seminars; and

(iv) Seminars of Grama Sevaks and Sevikas.

In all cases except the Seminars of Gramasevaks, the Seminars are held as and when considered necessary. No rigid instructions regarding grouping of districts and the periodicity of their holding have been issued by the Government. The Seminars of Gramasevaks are held once in a year at places and dates to be determined by the Collectors.

(*c*) General exchange of experiences and ideas.

(*d*) No decision has been taken regarding Seminars to be held hereafter.

SRI S. NAGARAJA MONIGAR : சர்க்கார் ரீஜினல் செமினார் என்று அபிஷியல், நான்-அபிஷியல் கூடி நடந்து வருகிறது. இவைகள் அனுபவத்தில் மிகவும் உபயோகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அவைகளை அடிக்கடி நடத்த ஏற்பாடு செய்தால் நல்லது. அதைத் தொடர்ந்து அடிக்கடி அந்த அந்த ஜில்லாக்களிலேயாவது நடத்த ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் வருவதனால் அதன் மூலம் இந்தப் பரிசீலனை நடைபெறும்.

SRI A. GOVINDASAMY : அகில இந்தியாவுக்கும் சமுதாய நலத் திட்டத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் முசௌரியில் ஒரு நிலையம் இருப்பது போல சென்னை ராஜ்யத்திலே ஒன்றை ஏற்படுத்த நமது அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது செமினாரைப் பொறுத்தது.

Blocks (Delimitation)

* 526 *Q.*—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representations were made to the Government that the existing system of delimitation of blocks on the basis of population only is causing hardship to people of the thinly populated regions and that delimitation should be remodified on the basis of area also; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No such representation has been received. The assumption, however, that blocks are delimited on the basis solely of population strength is not correct.

(*b*) Does not arise.

SRI S. NAGARAJA MONIGAR : தற்போது எங்களுக்குக் கொடுத்துள்ள பட்டியலில் சேலம் ஜில்லாவில் பதினேழு ப்ளாக்குகள் என்றால் அதிக பரப்பளவுக்கு ஒரு ப்ளாக் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அறுபதினாயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ப்ளாக் என்றால் அதையும்விட அதிகமான ஜனத்தொகை உள்ள பகுதியும்கூட ஒரு ப்ளாக்காக அமைத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒரு ப்ளாக்குக்கு 17 லட்சம் ரூபாய் செலவிடுவது என்கிறபோது அதிக ஜனத்தொகை உள்ள இடத்திலும் இது தான் செலவழிக்கப்படுகிறது. ஆகவே இதை ஆராய்ந்து விஸ்தீர்ணம், ஜனத்தொகை இந்த அடிப்படையில் ப்ளாக்குகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வெறும் ஜனத்தொகை மட்டும் அல்ல, பிற்போக்கான நிலைமை, பரப்பளவு ஆகிய எல்லாவற்றையும் மனதில் கொண்டுதான் இந்த ப்ளாக்குகள் பிரிக்கப்படுகின்றன. அப்படித்தான் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் அதைப் பரிசீலனை செய்து மாற்றுவது என்பது முடியாத காரியம். ஏதேனும் தனிப்பட்ட இடத்தில் கஷ்டம் இருந்தால் அதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.